ரூ.4800 கோடி ரூபாய் டெண்டர் முறைகேட்டில் அன்று சி.பி.ஐ. விசாரணைக்குப் பதறிய

# பழனிசாமி - இன்று சி.பி.ஐ. விசாரணை கேட்க வெட்கமாக இல்லையா?

## அமைச்சர் கே.என்.நேரு காட்டமான கேள்வி!

சென்னை. ஜூன் 29-

**"4800 கோடி ரூபாய் டெண்டர் முறைகேட்டில் சி.பி.ஐ. விசாரணைக்கு பதறிய பழனிசாமி இன்று சி.பி.ஐ. விசாரணை கேட்பது வெட்கமாக இல்லையா?" என்று கழக முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என்.நேரு காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து அமைச்சர் கே.என். நேரு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சி விஷச்சாராய விவகாரத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்கிறது அ.தி.மு.க. 'சி.பி.ஐ. விசாரணை வேண்டும்' என்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறது.

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகேதான் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. 7 ஆண்டுகளுக்கு முன்பு இதே ராஜரத்தினம் மைதானம் அருகே 2017 மார்ச் 8ஆம் தேதி ஓ.பன்னீர்செல்வம் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினாரே... அது பழனிசாமிக்கு நினைவிருக்கிறதா?

ஜெயலலிதா மரணத்திற்கு சி.பி.ஐ. விசாரணை கேட்டுத்தான் அன்றைக்குப் பன்னீர்செல்வம் உண்ணாவிரதம் இருந்தார். இன்றைக்குப் பழனிசாமியோடு உண்ணாவிரதப் பந்தலில் அமர்ந்திருந்த முன்னாள் அமைச்சர் சி.பொன்னையனிடம் கேட்டு தெரிந்து கொள்ளட்டும். ஏனென்றால் 2017இல் பன்னீர்செல்வம் உண்ணாவிரதத்திலும் பங்கேற்றவர் பொன்னையன்.

அன்றைக்கு மோடியிடம் செல்வாக்கு பெற்றிருந்த பன்னீர்செல்வம் அணியினரின் கோரிக்கையை ஏற்று, சி.பி.ஐ. விசாரணையை அமைத்துவிடுவார்களோ என அஞ்சி, உடனே ஜெயலலிதாவின் மருத்துவ அறிக்கையை உண்ணாவிரதத்துக்கு இரண்டு நாட்கள் முன்பு பழனிசாமி அரசு ஏன் அவசர அவசரமாக வெளியிட்டது?

உண்ணாவிரதப் பந்தலில் பேசிய பன்னீர்செல்வம். "சி.பி.ஐ. விசாரணை நடந்தால் முதல் குற்றவாளி விஜயபாஸ்கர்தான். சி.பி.ஐ. விசாரித்தால் தான் ஜெயலலிதா மரணத்தின் மர்மம் வெளியே வரும்" என்றார். தலைவியின் மர்ம மரணத்தில் சி.பி.ஐ. விசாரணைக்கு அன்று முட்டுக்கட்டை போட்ட பழனிசாமி. இன்றைக்குக் கள்ளக்குறிச்சி விவகாரத்திற்கு சி.பி.ஐ. விசாரணை கேட்பதற்கு வெட்கமாக இல்லையா?

### ஓ.பி.எஸ். அணியினர் மாநிலங்களவையில் அமளி!

'ஜெயலலிதா மரணத்தை சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்' என்று மாநிலங்களவையில் ஓ.பி.எஸ் அணி எம்.பிக்கள் ஜெயலலிதா படத்துடன் சபாநாயகர் இருக்கையை முற்றுகையிட்டு அன்றைக்கு அமளியில் ஈடுபட்டனர். 'ஜெயலலிதா மரணத்தை சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்' என வலியுறுத்தி ஓ.பி.எஸ் அணியின் 12 எம்.பிக்கள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி அவர்களிடம் மனு அளித்தனர். இதற்கெல்லாம் ஒப்புக்கொள்ளாதவர்கள்தான் இன்றைக்கு சி.பி.ஐ.யைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கோரிக்கை வைக்கிறார்கள்.

### பழனிசாமி ஏன் பதறினார்?

4,800 கோடி ரூபாய் நெடுஞ்சாலை டெண்டர் முறைகேடு முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றது. எடப்பாடி பழனிசாமியின் உறவினர்களுக்கு ஒப்பந்தப் பணிகள் முறைகேடாக அளிக்கப்பட்டன. அது பற்றி ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என லஞ்ச ஒழிப்புத் துறையிடம் அன்றைய எதிர்க்கட்சியான தி.மு.க. மனு அளித்தது. அதன் மீது லஞ்ச ஒழிப்புத் துறை நடவடிக்கை எடுக்காததால் உயர் நீதிமன்றத்தில் தி.மு.க. வழக்குப் போட்டது. அந்தவழக்கில் சி.பி.ஐ. விசாரணைக்கு உயர் நீதிமன்றம் 2018 அக்டோபர் 12 ஆம் தேதி உத்தரவிட்டதுமே திருடனுக்குத் தேள் கொட்டியது போல பழனிசாமி ஏன் பதறினார்?

உத்தரவு வெளியான அன்றைய தினமே அமைச்சர் ஜெயக்குமார், முன்னாள் அமைச்சர் பொன்னையன், அதிமுக தேர்தல் பிரிவு துணைச் செயலாளர் இன்பதுரை ஆகியோரைக் கூட்டாகப் பத்திரிகையாளர்களைச் சந்திக்க வைத்து, "சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வோம்" என அவசர அவசரமாக ஏன் சொன்னார்?

அன்றைக்கு சி.பி.ஐ.க்குப் பதற்றம் அடைந்தவர் இன்றைக்கு சி.பி.ஐ.க்குத் தம்பட்டம் அடிக்கிறார்.

### அன்றைக்கு கசந்த சி.பி.ஐ. இன்றைக்கு இனிக்கிறதா?



அன்றைக்கு சி.பி.ஐ.க்கு பயந்து உச்ச நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டிய பழனிசாமிதான், இன்றைக்குக் கள்ளக்குறிச்சி விவகாரத்திற்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்கிறார். அன்றைக்குக் கசந்த சி.பி.ஐ., இன்றைக்கு ஏன் இனிக்கிறது? "ஏன்யா நான் சரியாதான் பேசுறேனா" என ஒரு படத்தில் நடிகர் சங்கிலி முருகன் பேசும் வசனம்தான் நினைவுக்கு வருகிறது. சசிகலா தயவில் முதலமைச்சர் ஆனபோது ஒரு முகமும், மோடி தயவில் அந்த முதலமைச்சர் பதவியைத் தக்கவைத்துக் கொண்டபோது இன்னொரு முகமும் காட்டிய இரட்டை வேடத்தைத்தான் இன்றைக்கு சி.பி.ஐ. விஷயத்திலும் காட்டுகிறார் கபடதாரி பழனிசாமி.

"கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும்" எனப் பிதற்றியிருக்கிறார் பழனிசாமி. அவருடைய பொறுப்பில் கட்சி வந்த பிறகு ஒரு தேர்தலிலும் அதிமுக வெற்றி பெறவில்லை. 2024 நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியைச் சேர்த்தால் தொடர்ந்து 9 தோல்விகளைச் சந்தித்த வரலாற்றுப் பெருமைக்குரிய பழனிசாமிக்குப் பித்தம் தலைக்கு ஏறிவிட்டது. அதனால்தான் முதலமைச்சரை ராஜினமா செய்யச் சொல்கிறார். பழனிசாமி அவர்களே... உங்கள் முதுகைக் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். கறை படிந்த வரலாறு தெரியும்!

### தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு! ராஜினாமா செய்தாரா?

ஸ்டெர்லைட்டுக்கு எதிராகப் போராடிய 13 அப்பாவிகளைத் துள்ள துடிக்கத் தூத்துக்குடியில் சுட்டுக் கொன்றது உங்கள் ஆட்சியில்தானே! அப்போது நீங்கள் ராஜினாமா செய்தீர்களா?

பொள்ளாச்சியில் நூற்றுக்கணக்கான இளம் பெண்களைக் கடத்திக் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த விவகாரத்தில் அ.தி.மு.க. நிர்வாகி அருளானந்தம் கைதானபோது அபலைகளின் கண்ணீரைத் துடைக்க முதலமைச்சர் நாற்காலியைத் துறந்தீர்களா?

முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா வாழ்ந்த கொடநாட்டிலேயே கொலை, கொள்ளைகள் நடந்தபோது, தலைவி வாழ்ந்த இல்லத்தின் இரத்தக் கறையைத் துடைக்க பதவியைத் தூக்கியெறியாமல் இருந்தது ஏன்?

குட்கா ஊழலில் உங்கள் அமைச்சர் விஜயபாஸ்கர் சம்பந்தப்பட்டபோது பழனிசாமி பல்லையா குத்திக் கொண்டிருந்தார்?

### முதல்வரை ராஜினாமா செய்யச் சொல்ல அருகதை கிடையாது!

சாத்தான்குளத்தில் தந்தை ஜெயராஜ், மகன் பென்னிக்ஸ் இருவரும் போலீஸ் லாக்அப்பில் கொல்லப்பட்டு, காவல்நிலையம் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டபோது காவல்துறைக்குப் பொறுப்பு வகித்த பழனிசாமி ராஜினாமா செய்தாரா?

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டும் எனச் சொல்ல உங்களுக்கு அருகதை இருக்கிறதா?

### அப்போது மட்டும் விசாரணை ஆணையம் தேவைப்பட்டதா?

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் நீதிபதி கோகுல்தாஸ் விசாரணை ஆணையத்தைத் தமிழ்நாடு அரசு அமைத்திருக்கிறது. ஆனால், "ஒரு நபர் ஆணையம் அமைத்தாலும் மக்கள் மத்தியில் நம்பகத்தன்மை ஏற்படாது" என்று சொல்கிறார் பழனிசாமி. ஜெயலலிதா மரணத்துக்கு சி.பி.ஐ விசாரணையை மறுத்து, அதற்குப் பதிலாக நீதிபதி ஆறுமுகசாமி ஆணையத்தை ஏன் பழனிசாமி அமைத்தார்? அப்போது மட்டும் விசாரணை ஆணையம் தேவைப்பட்டதா? அன்றைக்கு நம்பகத்தன்மை பாதுகாக்கப்பட்டதா?

விஷச்சாராயம் நிச்சயம் தடுக்கப்பட வேண்டும். அதில் யாருக்குமே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் விஷச் சாராய மரணங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதில், தமிழ்நாடு கடைசி இடங்களில் தான் இருக்கிறது.

### பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் கள்ளச்சாராய சாவு!

ஒன்றிய அரசின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) அறிக்கையின் படி, 2017இல் 1,497 கள்ளச் சாராய வழக்குகள் பதிவாகி, 1,510 பேர் உயிரிழந்தனர். அதிகபட்சமாகக் கர்நாடகாவில் 256 பேரும் மத்தியப் பிரதேசத்தில் 216 பேரும், ஆந்திராவில் 183 பேரும், பஞ்சாபில் 170 பேரும், அரியானாவில் 135 பேரும், புதுச்சேரியில் 117 பேரும் சத்தீஸ்கரில் 104 பேரும் உயிரிழந்துள்ளனர்.

2018ல் 1,365 பேர் கள்ளச் சாராயத்தால் இறந்தனர். இதில், அதிகபட்சமாக மத்தியப் பிரதேசத்தில் 410 பேரும் கர்நாடகாவில் 218 பேரும், அரியானாவில் 162 பேரும், பஞ்சாபில் 159 பேரும், உத்தரப்பிரதேசத்தில் 78 பேரும், சத்தீஸ்கரில் 77 பேரும், ராஜஸ்தானில் 64 பேரும் உயிரிழந்தனர். 2019ல் கள்ளச் சாராயத்தால் நாட்டில் 1,296 பேர் இறந்தனர். கர்நாடகாவில் கலப்பட சாராயம் குடித்து அதிகபட்சமாக 268 பேர் உயிரிழந்தனர். பஞ்சாபில் 191 பேரும், மத்தியப் பிரதேசத்தில் 190 பேரும், சத்தீஸ்கரில் 115 பேரும், அசாமில் 98 பேரும், ராஜஸ்தானில் 88 பேரும் உயிரிழந்தனர்.

2020இல் கொரோனா பரவிய காலத்திலும் கூட கள்ளச் சாராய மரணங்கள் நடந்தன. நாடு முழுவதும் 931 கள்ளச் சாராய வழக்குகள் பதிவாகி 947 பேர் உயிரிழந்தனர். அப்போது அதிகபட்சமாக மத்தியப் பிரதேசத்தில் 214 பேரும், ஜார்க்கண்டில் 139 பேரும், பஞ்சாபில் 133 பேரும், கர்நாடகாவில் 99 பேரும், சத்தீஸ்கரில் 67 பேரும் கள்ளச்சாராயத்தால் உயிரிழந்தனர்.

2021ல் இந்தியா முழுவதும் 708 சட்டவிரோத போலி மது அருந்திய சம்பவங்கள் நடந்தன. அதில் 782 பேர் இறந்து போனார்கள். இந்த மரணத்தில் அதிகபட்சமாக உத்தரப் பிரதேசத்தில் 137 பேரும் பஞ்சாபில் 127 பேரும் மத்தியப் பிரதேசத்தில் 108 பேரும் கர்நாடகாவில் 104 பேரும் ஜார்க்கண்டில் 60 பேரும், ராஜஸ்தானில் 51 பேரும் இறந்தார்கள். இந்தப் புள்ளிவிவரங்கள் பார்த்தால் மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாடு அவ்வளவு மோசமான இடத்தில் இல்லை. இருந்தாலும் விஷச் சாராயம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

### ஜெயலலிதா ஆட்சியில் கள்ளச் சாராய சாவு ஏற்படவில்லையா?

கள்ளச் சாராயம் குடித்து மரணங்கள் நடப்பது திமுக ஆட்சியில் மட்டும் தான் என்பது போல அதிமுக பேசி வருகிறது. அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் 2001இல் பண்ருட்டியில் கள்ளச்சாராயத்திற்கு 52 பேர் பலியானார்கள். அதன் பிறகு அதே ஆண்டில் காஞ்சிபுரம், செங்குன்றம் பகுதிகளில் கள்ளச்சாராயம் அருந்தி 30 பேருக்கு மேல் இறந்தார்கள். 1993 ஜனவரியில் விழுப்புரம் அருகே சித்தலிங்கமடம் கிராமத்தில் விஷச் சாராயம் குடித்து 9 பேர் இறந்தார்கள். அதே ஆண்டு டிசம்பரில் திருத்தணி அருகே திருவாலங்காடு பகுதியில் கள்ளச் சாராயம் அருந்தி 7 பேர் பலியானார்கள். 1996 ஜனவரியில் திருச்சி உறையூரில் விஷச் சாராயம் அருந்தி 10 பேர் பலியானார்கள். அப்போதெல்லாம் கள்ளச் சாராயத்தைத் தடுக்க அன்றைய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனால், அதற்காக முதலமைச்சர் பதவியை அம்மையார் ஜெயலலிதா ராஜினாமா செய்யவில்லை.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களிலும் இப்படியான கள்ளச்சாராய மரணங்கள் அதிக அளவில் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்காக அந்த மாநில முதலமைச்சர்கள் எல்லாம் ராஜினாமா செய்துவிட்டார்களா? குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரின் மஜூர்காம், நகவ் பகுதிகளில் 2009 ஜூலையில் கள்ளச் சாராயத்துக்கு 136 பேர் பலியானபோது அங்கே மோடி தான் முதலமைச்சராக ஆட்சி செய்து கொண்டிருந்தார். உள்துறை அமைச்சராக இருந்தவர் அமித் ஷா. அவர்கள் இருவரும் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று ராஜினாமா செய்தார்களா?

மக்களின் நம்பிக்கையை முழுவதுமாக இழந்து தொடர் தோல்விகளைச் சந்தித்து வரும் பழனிசாமி, சொந்தக் கட்சியினரிடமும் செல்வாக்கை இழந்துவிட்டார். இதனைத் திசைதிருப்பி, தனது இருப்பைத் தக்கவைக்கத்தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டுமென வீராவேசம் காட்ட முயற்சி செய்துகொண்டிருக்கிறார். யார் காலையும் பிடித்து முதலமைச்சர் ஆனவர் அல்ல எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் பேராதரவுடன் ஆட்சி செய்து, தமிழ்நாட்டினை முன்னேற்ற நாளும் செயல்பட்டு வருகிறார். ஆகவே, பகல்கனவைக் காணுவதைப் பழனிசாமி நிறுத்திவிட்டு, பா.ஜ.க.விடம் அடகு வைக்கப்பட்டு, தற்போது மூழ்கும் கப்பலாக உள்ள தனது கட்சியைப் பற்றிக் கவலைப்படும் வேலையைப் பார்க்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

# கள்ளச்சாராய சாவை வைத்து கபட நாடகமாடுகிறார் எடப்பாடி!

## முக்குலத்தோர் புலிப்படைக்கட்சித் தலைவர் நடிகர் சே.கருணாஸ் சாடல்!

*சென்னை, ஜூன் 29-*

*முக்குலத்தோர் புலிப் படைக் கட்சி தலைவர் சே.கருணாஸ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*கள்ளச்சாராய உயிரிழப்பை வைத்து கடந்த சில நாட்களாக எட்டப்பர் எடப்பாடியார் நடத்தும் கள்ள நாடக காட்சிகள்.. சட்டசபையில் தொடங்கி உண்ணாவிரதம் பந்தல் வரை சகிக்க முடியவில்லை! தமிழ்நாட்டின் அத்தனை உரிமைகளையும் பா.ஜ.க. அரசு பிடுங்கிய போது, எடப்பாடி தமிழ்நாட்டு உரிமை மீட்க ஒரு நாளும் உண்ணாவிரதம் இருந்ததில்லை. தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் வீதிக்கு வந்து போராடிய போது அவர்களை கொத்துக் கொத்தாக கொன்றொழித்துவிட்டு தொலைக்காட்சியில் பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று சொன்னவராச்சே! இது மட்டுமா.. எத்தனையோ.. அத்தனை தகிடுத்தத்தங்களையும், மறந்துவிட்டு இன்று உண்ணாவிரத நாடகமாடுகிறார் எடப்பாடி!*



*சட்டமன்றத்தில் எத்தனையோ மக்கள் பிரச்சினைக்கு பேசாது மௌனமாய் இருந்த எதிர்க்கட்சி எடப்பாடி. இன்று கள்ளக் குறிச்சிக்கு காவடி ஆடுகிறார். அவர் ஆட்சியில் இருந்தபோது, சபாநாயகர் தனபாலை வைத்து என்னென்னவெல்லாம் செய்தார் மறந்து விட்டார் போல! எத்தனை முறை மக்கள் பிரச்சினையை பேச வந்த தி.மு.க.வை சட்ட மன்றத்திலிருந்து வெளியேற்றினார்! அதுவும் மறந்துவிட்டார் போல, எல்லாம்.. நாடகம்!! எடப்பாடி செய்வது அரசியல் நாடகம் தான் என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்!*

*அரசு இந்தக் கள்ளச்சாராய உயிரிழப்பை வைத்து எடப்பாடி பழனிசாமியும், பா.ஜ.க.வும் ஆதாய அரசியல் செய்கின்றனர். கள்ளச் சாராய மரணங்கள் கொடுமையிலும் கொடுமைதான்! தமிழ்நாடு அதற்குரிய தக்க நடவடிக்கைகளை உடனுக்குடன் செய்தது; செய்கிறது! கள்ளக்குறிச்சி சம்பவம் நடந்த உடனேயே நீதி விசாரணை மற்றும் சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. பல அதிகாரிகள் மாவட்ட ஆட்சி தலைவர்கள் என இடமாற்றம் செய்யப்பட்டார்கள்; நீக்கப்பட்டார்கள்; கள்ளச்சாராய தொடர்புடையோர் கைது செய்யப்பட்டனர். ஆனால் கள்ளக்குறிச்சி விவகாரம் குறித்து விவாதிக்க ஒத்துழைக்காமல், திசை திருப்பும் அரசியலை கையில் எடுத்து எதிர்க்கட்சித் தலைவர் எடப்படியார் நாடகமாடுகிறார்.*

*கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து உண்மையாகவே எடப்பாடி விவாதிக்க தயாராக இல்லை. ஆனால் கள்ளக்குறிச்சி உயிரிழப்புகளை வைத்து திட்டமிட்டு அரசியல் செய்கின்றார். ஏன்? எடப்பாடி ஆட்சியில் கள்ளச்சாராய மரணங்கள் நிகழவில்லையா? அதற்காக நான் கள்ளக்குறிச்சியை ஞாயப்படுத்தவில்லை! அதிமுக ஆட்சியில் நடந்த கள்ளச்சாராய மரணங்கள் மூடி மறைக்கப்பட்டன. ஆனால் இப்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன! 2001ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில், கடலூர் மாவட்டம் பன்ருட்டியில் 53 பேர் உயிரிழந்தனர். 200 பேரின் பார்வை பறிபோனது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்பிறகு அ.தி.மு.க. ஆட்சியில் கள்ளச்சாராயம் ஒழிந்ததா? அப்போதெல்லாம் எங்கிருந்தார் எடப்பாடி?*

*பா.ஜ.க. ஆட்சி செய்த குஜராத் மாநிலத்தில் ஏழெட்டு ஆண்டுகளில் பல்வேறு சம்பவங்கள் நடந்தேறின. ஒவ்வொரு முறையும் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அந்த மாநில முதல்வர்களை பதவி விலகக்கோரி யாரும் கூறவில்லை. அதேபோல் அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த மரணங்களுக்கு யாரும் பதவி விலகுமாறு கூறவில்லை. ஆனால் எடப்பாடிக்கு பழனிச்சாமிக்கு முக ஸ்டாலின் பதவி விலக வேண்டும் என்ற அற்ப ஆசை தலைக்கு ஏறுவது தான் ஏன் என்று தெரியவில்லை?? இது என்ன தர்ம ஞாயம்!*

*கள்ளக்குறிச்சி விவகாரத்தில் முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால், குற்றவாளிகளைக் காப்பாற்ற முயற்சித்திருந்தால் சி.பி.ஐ. விசாரணை கூட கேட்கலாம் தவறில்லை. ஆனால், அனைத்து நடவடிக்கைகளும் எடுத்ததை பார்த்த பிறகும், சி.பி.ஐ. விசாரணைக்கு கேட்கிறார் என்றால், அது தான் எடப்பாடியின் அரசியல் நாடகம்!*

*அ.தி.மு.க.வின் தொடர் தோல்வியை மூடிமறைக்க எடப்பாடி காட்டும் கபட நாடக வித்தை இது! எடப்பாடி பழனிசாமியிடம் அ.தி.மு.க. வந்த நாளிலிருந்து அ.தி.மு.க. சந்தித்த தேர்தல்கள் அனைத்திலும் தோல்வி! அதனால்தான், 'தேர்தல் நேர்மையாக நடக்காது' என்று சொல்லி விக்கிரவாண்டி இடைத்தேர்தலைப் புறக்கணித் திருக்கிறார் எடப்பாடி பழனிசாமி! ஆடத் தெரியாதவளுக்கு வாசல் கோணல் கதைதான்!. இவரது தேர்தல் புறக்கணிப்புக்குப் பின்னால் இரண்டு சூழ்ச்சிகள் இருக்கின்றன. ஒன்று, அ.தி.மு.க. போட்டியிட்டால் நிச்சயம் தோற்றுப் போகும். எனவே அந்தத் தோல்வி முகத்தை மறைக்கலாம் என்பது இன்னொன்று தனது எஜமானன் ரகசிய உறவாளன் பா.ஜ.க.வின் வேட்பாளருக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்து தனது அடிமை விசுவாசத்தைக் காட்டிக் கொள்வது! வேறென்ன காரணம் இருக்க முடியும்!!??*

*பா.ஜ.க.வின் பத்தாண்டு கால பாசிச அழிவு நடவடிக்கைகள் அனைத்துக்கும் துணை போன கட்சி அ.தி.மு.க. சிறுபான்மை இசுலாமிய இன மக்களுக்கும், ஈழத் தமிழ் மக்களுக்கும் பச்சைத் துரோகம் இழைத்தது அ.தி.மு.க. தமிழ்நாட்டு மக்கள் மறக்கமாட்டார்கள். இதேபோல்தான் பா.ஜ.க.வின் அனைத்து மக்கள் விரோதச் சட்டங்களுக்கும் ஆதரவாக இருந்தது செயல்பட்ட ஒடிசா நவீன் பட்நாயக்கும், ஆந்திரா ஜெகன் மோகன் ரெட்டியும் தோற்கடிக்கப்பட்டார்கள் என்பதை அ.தி.மு.க., மறந்து விடக் கூடாது.*

*மக்களுக்கான அரசியலை செய்ய எடப்பாடி கற்றுக்கொள்ளட்டும்.. சந்தடி சாக்கில் சந்தியா ராகமெல்லாம் பாடி மக்களை ஏமாற்றமுடியாது.. மக்கள் விழித்துக் கொண்டுவிட்டார்கள்! எடப்பாடி செய்வது கபட நாடகம்தான் என்பது மக்களுக்கு தெளிவாக புரியும்!*

*இவ்வாறு சே. கருணாஸ் அறிக்கையில் கூறியுள்ளார்.*

---

அறிவிக்கப்படாத அவசர நிலையை 10 ஆண்டுகளாக

# பா.ஜ.க. பிரகடனப்படுத்தி உள்ளது!

## மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா குற்றச்சாட்டு!

*டெல்லி, ஜூன் 29 -*

*கடந்த 10 ஆண்டுகளாக நாட்டில் அறிவிக்கப்படாத அவசர நிலையை பாரதிய ஜனதா கட்சி பிரகடனப் படுத்தி உள்ளதாக திமுக மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்துள்ளார்.*



*நாடாளுமன்றத்தின் மைய அரங்கில் குடியரசுத் தலைவர் உரையாற்றிய நிகழ்வில் கலந்து கொண்ட பிறகு திமுக மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா டெல்லியில் அவரது இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.*

*அப்போது பேசிய திருச்சி சிவா, அவசர நிலை குறித்து குடியரசுத் தலைவர் என்று பேசியுள்ளார். அவசர நிலையில் அதிகம் பாதிக்கப்பட்ட கட்சி திராவிட முன்னேற்ற கழகம் எனவும் அவசர நிலை நாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டது என்பது மறைக்கப்பட வேண்டியதில்லை எனவும் தெரிவித்தார்.*

*50 ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட அவசர நிலை அவை என்றால், கடந்த 10 ஆண்டுகளாக நாட்டில் அறிவிக்கப்படாத அவசர நிலை செயல்பாட்டில் உள்ளதாகவும், மத்திய அமைப்புகள் மூலமாக எதிர்கட்சியினர், முக்கிய அரசியல்வாதிகள் கைது செய்யப்படுவதும் சிறையில் அடைக்கப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் என அறிவிக்கப்படாத அவசர நிலையை பா.ஜ.க. கடைபிடித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.*

*இனிமேல் அவசர நிலை வரவே கூடாது என பாரதிய ஜனதா கட்சி எண்ணுகிறது என்றால் அவசர நிலையின் போது செய்யப்பட்ட மாற்றங்களை மீண்டும் திருத்தம் செய்ய வேண்டும் எனவும், குறிப்பாக மாநில பட்டியலில் இருந்த கல்வியை அவசர நிலையின் போது பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டதாகவும், ஏன் அதனை மீண்டும் மாநில பட்டியலுக்கு பாரதிய ஜனதா கட்சி மாற்ற முன்வரவில்லை? எனவும் கேள்வி எழுப்பினார்.*

*மேலும் இன்று குடியரசுத் தலைவர் உரை ஆளும் அரசாங்கம் எழுதிக் கொடுத்த உரை எனவும் அதிலும் குறிப்பாக பெரும்பான்மை பெற்ற அரசாங்க ஒன்றிய அரசு உள்ளது என குடியரசுத் தலைவர் குறிப்பிட்டது அதிகம் சிரிப்பை ஏற்படுத்துவதாக கிண்டல் அடித்தார்.*

*அறுதி பெரும்பான்மை கூட இல்லாத கட்சியாக பாஜக வெற்றி பெற்றுவிட்டு கூட்டணிக் கட்சிகளின் தயவோடு ஆட்சி அமைத்துள்ள அவர்கள் பெரும்பான்மை பெற்ற கட்சி என நாடாளுமன்றத்தில் சொல்கிறார்கள் எனவும் திருச்சி சிவா குறிப்பிட்டார்.*



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி காணை தெற்கு ஒன்றியம் பொன்னங்குப்பம் ஊராட்சியில் பா.ம.க. சங்கர் தலைமையில் 25 நபர்கள் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி முன்னிலையில் கழகத்தில் இணைந்து, நமது வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகத்திற்கு தங்கள் ஆதரவை தெரிவித்தனர். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். இரா.இலட்சுமணன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றியச் செயலாளர் கல்பட்டு வி. ராஜா உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.